**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

| | |
|---|---|
| Calendar | |
| Miscellaneous | CC.No.158/2009 |
| Preliminary register | |
| Sessions | |

| | |
|---|---|
| | Prosecution PW 8 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | டாக்டர். கிருஷ்ணமூர்த்தி |

Husband Name / Father's Name

Village

Taluk

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of October 2019.

நான் தற்போது சென்னை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் அறுவைசிகிச்சை பிரிவில் மூத்த அறுவை சிகிச்சை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் திருநெல்வேலி அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி அரசு மருத்துவராக பணியில் இருந்தபோது கடந்த 26.2.2009 ம் தேதி 12.45 மணியளவில் மருதகுளம் பிள்ளையார் கோவில் தெருவை சேர்ந்த சீனிகோனார் என்பவரது மனைவி இசக்கியம்மாள்(65) என்பவரை சிகாமணி என்பவர் சிகிச்சைக்காக என்னிடம் ஆஜர் படுத்தினார். அவர் தன்னை 25.5.2009 மாலை 5.45 மணியளவில் இனம் தெரிந்த இரண்டு நபர்கள் தன் வீட்டில் வைத்து கம்பால் தாக்கியதாக கூறினார். காயங்கள் 1. இடது முலங்கையில் வீக்கம் காணப்பட்டது. அக்காயத்திற்கு நுண்கதிர் படம் எடுத்து சிகிச்சைகாக உள்நோயாளியாக அனுமதித்தேன். அப்படத்தில் இடது கையில் எலும்பு முறிவு காணப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று அளித்தேன். அந்த காய சான்றிதழ் அ.சா.ஆ 3 ஆகும். மேற் சொன்ன காயம் கம்பு மற்றும் மண்வெட்டி கனையால் தாக்கினால் ஏற்பட வாய்ப்புண்டு. அதே நாள் அதே சம்பவத்தில் காயம்பட்ட மருதகுளம் அம்மன் கோவில் தெருவை சேர்ந்த சீனிகோனாரின் மகன் இசக்கி(35) என்பவரை கதிர்வேல் என்பவர் சிகிச்சைகாக ஆஜர்படுத்தினார். வெளி காயங்கள் எதுவும் தென்படவில்லை. முதுகின் கீழ் பகுதியில் வலி இருப்பதாக கூறினார் அப்பகுதிக்கு நுண் கதிர் படம் எடுத்து சிகிச்சைகாக உள்நோயாளியாக அனுமதித்தேன். பரிசோதனையின் முடிவில் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரணகாயம் என சான்றளித்தேன். காயசான்றிதழ் அ.சா.ஆ.4. அதே நாள் அதே சம்பவத்தில் காயம்பட்ட இசக்கி (எ) மணி என்பவரின் மனைவி இசக்கியம்மாள் என்பவரை சிகாமணி

என்பவர் சிகிச்சைக்காக என்னிடம் ஆஜர்படுத்தினார். அவருக்கு வலது பின்காலில் முழங்காலின் கீழ் 6x4x3 அளவிலான வீக்ககாயம் காணப்பட்டது. உடம்பு முழுவதும் வலி இருந்ததாக கூறினார். சிகிச்சைக்காக உள்நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரணகாயம் என சான்றளித்தேன். காயசான்றிதழ் அ.சா.ஆ.5. மேற்சொன்ன காயங்கள் கம்பு மற்றும் மண்வெட்டி கனையால் தாக்கினால் ஏற்பட வாய்ப்பு உள்ளது. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

சீனிகோனார் மனைவி இசக்கியம்மாளை யார் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றால் சிகாமணி என்பவர் சேர்த்தார். மூன்று பேரும் என்னிடம் சிகிச்சைக்கு ஒரே நேரத்தில் வந்தார்களா அல்லது தனித்தனியாக வந்தார்களா என்றால் சீனிகோனாரின் மகன் இசக்கி என்பவர் 25.02.2009 இரவு 9.45 மணியளவிலும், மற்ற இருவரும் 26.02.2009 அதிகாலை 12.45 மணியளவிலும் சிகிச்சைக்காக ஆஜரானார்கள். மேற்படி மூன்று நபர்களும் கையால் தாக்கியதால் காயம் ஏற்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான், கம்பு மற்றும் கல்லால் தாக்கியதாக சொன்னார்கள். சுவர் ஏறி குதித்ததால் காயம் ஏற்பட்டதாக என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். யார் யாருக்கு எங்கு காயம் ஏற்பட்டது என்று போலிஸ் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சொல்லியிருக்கிறேன். பைக்கில் போய் தவறி விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.